| UG–156 | FTM-03 |
|---|---|

# B.A./B.Lit. DEGREE EXAMINATION – JUNE, 2018

## ஆட்சித் தமிழ்

Time : 3 hours                    Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு விடை தருக.

1. அரசு-பொருள் தருக.

2. மூவேந்தர்களின் வரலாற்றை அறிய உதவும் சங்க இலக்கியம் எது?

3. திருவடிகள் யார்?

4. தனித்தமிழ் இயக்கத்தின் தந்தை யார்?

5. "தேசபக்தன்" இதழின் ஆசிரியர் யார்?

6. சென்னை மாகாணம் "தமிழ் நாடு" என்று மாற்றப்பட்ட ஆண்டு எது?

7. எழுத்துச் சீரமைப்பினைச் செய்த இத்தாலியர் பெயர் என்ன?

8. ஆட்சி மொழிச் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு எது?

9. “விபீடணன்” “இலக்குவன்” - இவற்றின் வடசொற்கள் எது?

10. விநாயகர் புராணத்தில் ஆளப்பட்ட சட்டம் என்ற சொல் எப்பொருளைக் குறிக்கும்?

11. “ஜாமீன்” “சம்மன்” - இவற்றின் தமிழ்ச் சொற்கள் எவை?

12. சென்னை மாகாணத்தில் இடம்பெற்ற பிற மொழி பேசும் பகுதிகள் எவைஎவை?

13. அலுவலகத்தின் முதல்நிலை அறிமுகம் எது?

14. வல்லினம் மிகுதலை இலக்கண நூலார் எப்படி அழைப்பர்?

15. ஆற்றலுடைய மின்னணு இயந்திரத்தின் மறு பெயர் என்ன?

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. அரசினை உருவாக்கும் மூன்று உறுப்புக்கள் எவை?

17. பல்லவர் காலத்தில் நீதி மன்றங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

18. “மாடைக்கூலி” “முத்தாவணம்” -பொருள் தருக.

19. தமிழக அரசு தமிழில் எழுதுவதை ஊக்குவிக்க அறிவித்த திட்டங்கள் என்ன?

20. சட்ட ஆட்சி மொழி ஆணையம் என்றால் என்ன?

21. மொழி பெயர்க்கப்படும் பொருளின் இரு பிரிவு எது?

22. பேராசிரியர் சுந்தரம்பிள்ளை தழுவி எழுதிய மூல நூலின் பெயர் என்ன? படைத்த நூலின் பெயர் என்ன?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. அருந்தமிழும் ஆட்சித் தமிழும் பெறும் இடத்தினை எழுதுக.

24. பிற்கால சோழர்கால செயலாக்கத் துறை குறித்து எழுதுக.

25. தேவநேயப் பாவாணர்- குறிப்பு வரைக.

26. சட்டத் தமிழ் பிரிவின் பணிகளை விளக்குக.

27. மொழிபெயர்ப்பாளரின் தகுதிகள் குறித்து எழுதுக.

28. சட்டமும் முறைமையும் - விவரி.

29. சட்டமன்றத் தோற்றம் குறித்து விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. பல்லவர் கால ஆட்சி குறித்து விவரி.

31. ஆட்சி மொழிச் சட்டத்தில் புகுத்தப்பட்ட திருத்தங்களை விளக்குக.

32. தமிழ் வளர்ச்சித் துறையின் தனித்தன்மைகள் குறித்து எழுதுக.

33. ஒரு குலைச் சொற்களும் ஒரு பொருட் கிளவிகரும் குறித்து ஆராய்க.

34. சட்டமன்றத் தமிழின் மொழி நடையினை விளக்குக.

| UG–160 | FTM–02 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

## Third Year

## Functional Tamil

மொழிபெயர்ப்புக் கலை

Time : 3 hours | Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

1. மொழிபெயர்ப்பு என்றால் என்ன?
2. பகவத்கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தவர் யார்?
3. Data-தமிழ்ச்சொல் தருக.
4. ‘பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள், தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்’ - கூறியவர் யார்?
5. மின்னஞ்சல்-ஆங்கிலச்சொல் தருக.
6. Post-தமிழில் மொழிபெயர்க்க.
7. ‘இலக்கியம்’ - ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க.

8. ‘Communist party’ - தமிழில் மொழிபெயர்க்க.

9. கலைச்சொல்லாக்கம் தருக: Antenna.

10. கலைசொல்லாக்கம் தருக: Haemoglobin.

11. இயந்திரமொழிபெயர்ப்பு என்று குறிப்பிடப்படுவது யாது?

12. Oxford என்பதை ஆக்ஸ்ஃபோர்டு என்று எழுதுவதன் பெயர் என்ன?

13. The secret way என்ற நூலின் தமிழ்மொழி பெயர்ப்பு நூல் எது?

14. Animation என்பதன் தமிழ் மொழி பெயர்ப்புச் சொல் என்ன?

15. Linguistics என்பதன் தமிழ்மொழிபெயர்ப்புத் தருக.

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. மொழிபெயர்ப்புக் கொள்கை இரண்டனைக் கூறுக.

17. ஆங்கிலப்பெயர் கொண்ட தமிழ் இதழ்கள் இரண்டன் பெயர்களைக் கூறுக.

18. மொழிபெயர்ப்புத் தேவை என்பதற்கான இரு காரணங்களைக் கூறுக.

19. Tickets are issued - மொழிபெயர்க்க.

20. This is the book I searched for - மொழிபெயர்க்க.

21. இரட்சணிய யாத்ரிகத்தின் மூலநூல் எது?

22. Bent the tree while it is young’ - மரபுத் தொடரைத் தமிழாக்குக.

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. மொழிபெயர்ப்பாளருக்குரிய தகுதிகள் யாவை?

24. தழுவல் மொழிபெயர்ப்பு என்றால் என்ன?

25. கவிதைகளை மொழிபெயர்க்கும்போது ஏற்படும் சிக்கல்கள் யாவை?

26. மொழிபெயர்ப்புக் கொள்கைகள் ஐந்தனை விளக்குக.

27. தமிழாக்குக: (அ) Compact disc (ஆ) Evaporation (இ) Broad-cast (ஈ) Gravity (உ) network.

28. இணையான தமிழ் மரபுத்தொடர் தருக

(அ) No smoke without fire

(ஆ) Union is strength

(இ) Art is long and life is short

(ஈ) Think everybody alike

(உ) Haste make waste.

29. 'கணிப்பொறி மொழிபெயர்ப்பு' - குறிப்பு வரைக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு
மூன்று பக்க அளவில் விடை தருக.

30. மொழிபெயர்ப்பில் ஏற்படும் சிக்கல்கள் யாவை?

31. மொழிபெயர்ப்பு வகைகளை விவரிக்க.

32. மொழிபெயர்ப்பு, எவ்வெத்துறைகளில் பயன்படுகின்றது என்பது குறித்துக் கட்டுரை வரைக.

33. கலைச் சொல்லாக்கம் என்றால் என்ன? தமிழில் கலைச்சொற்களை உருவாக்கும்போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் யாவை?

34. மொழிபெயர்க்க:

It was the month of October and November increasing rain in chennai. The lakshmi Nursing home a private hospital for women in mylapore was fully crowded. Dr. Shankari who used to finish her duty as six, in this evening could leave only at 7 O'clock on that day.

———————

| | |
|---|---|
| **UG–170** | **BTM-31** |

B.A. DEGREE EXAMINATION — JUNE, 2018.

Third Year

Tamil

சங்க இலக்கியம்

Time : 3 hours | Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஓரிரு சொற்களில் விடை தருக.

1. நற்றிணை கூறும் 'நெடுநீர்ச் சேர்ப்பன்' – எந்த நிலத் தலைவன்?

2. 'நல்ல' என்ற அடைமொழியோடு அழைக்கப்படும் எட்டுத்தொகை நூல் எது?

3. பதிற்றுப்பத்தில் ஐந்தாம் பத்தைப் பாடிய புலவர் யார்?

4. நும் பாடப்பகுதியில் அமைந்த பரிபாடலின் ஆசிரியர் யார்?

5. நாடகப் பாங்கு கொண்ட எட்டுத்தொகை நூல் எது?

6. பரிமா, அரிமா, களிறு, கராம் – என கலித்தொகை எதனைச் சுட்டுகிறது?

7. அகநானூற்றின் மூன்று பிரிவுகள் யாவை?

8. நெய்தல் நிலத் தலைவியின் அழகிற்கு அம்மூவனார் கூறும் உவமை யாது?

9. பரணரின் நண்பராக இருந்த புலவர் யார்?

10. நீடுவாழ்வார் யார்?

11. சிறு கை அளாவிய கூழ் எத்தகையது?

12. காக்க வேண்டிய பொருளாக வள்ளுவர் கூறுவது எது?

13. கொற்கைக் கோமான் யார்?

14. நல்லியக்கோடனின் நாடு எது?

15. சிறுபாணாற்றுப்படையின் அடிகளைச் சுட்டுக.

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

16. ஆடு மகள் நடந்த கொடும்புரி நோன் கயிறு – எது?

17. ‘வணங்கிய சாயல், வணங்கா ஆண்மை’ – யாரைச் சுட்டுகிறது?

18. மறுபிறப்பு அறுக்கும் மாசில் சேவடி யாருடையது?

19. ஓமை மரத்திற்கு உவமையாக அகநானூற்றுப் புலவர் எதனைக் கூறுகிறார்?

20. பொறுமைக்கு வள்ளுவர் கூறும் உவமை யாது?

21. இனிய உளவாக இன்னாத கூறல் எதனைப் போன்றது?

22. சிறுபாணன் என்பவன் யார்?

பகுதி இ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

23. பிசிராந்தையாரின் நற்றிணைப் பாடல் கருத்தைப் புலப்படுத்துக.

24. முல்லைநில இளைஞர்களின் ஏறு தழுவுதல் நிகழ்வை கலித்தொகை வழி எடுத்துரைக்க.

25. வினை முடிந்து தேரில் வரும் தலைவனின் உயர்ந்த குணங்களாக அகநானூறு கூறுவனவற்றை விளக்கி எழுதுக.

26. 'அன்னையும், அத்தனும் அல்லரோ' – எனக் குறுந்தொகைத் தலைவி கூறுவதற்கான காரணத்தை விளக்குக.

27. ஒழுக்கத்தினால் அடையும் மேன்மைகளாக வள்ளுவர் கூறுவனவற்றை எடுத்துரைக்க.

28. புறங்கூறுதலின் தீமைகள் குறித்த குறட்பாக் கருத்துக்களை விளக்கி எழுதுக.

29. விறலியின் தோற்றம் குறித்த சிறுபாணாற்றுப்படையின் வருணனையை விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. பதிற்றுப்பத்து உணர்த்தும் செங்குட்டுவனின் மாண்புகளைத் தொகுத்துரைக்க.

31. திருமாலின் பெருமைகளாகப் பரிபாடல் கூறுவனவற்றைக் கட்டுரைக்க.

32. பரணர் இயற்றிய புறநானூற்றுப் பாடல்களின் கருத்துக்களை விவரிக்க.

33. விருந்தோம்பலின் மாண்புகளாக வள்ளுவர் கூறுவனவற்றை விவரிக்க.

34. நல்லியக்கோடனின் உயர் பண்புகளைச் சிறுபாணாற்றுப்படை வழி எடுத்துரைக்க.

| UG–171 | BTM–32 |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

Third Year

இலக்கணம் 3 — யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. தளைகள் மொத்தம் எத்தனை வகைப்படும்?

2. யாப்பிற்கு உரை கண்டவர் யார்?

3. செய்யுளியல் எத்தனை காரிகைகளை உடையது?

4. நான்கடி சிறுமையும், எட்டடி பெருமையும் பெற்று வருவது எது?

5. குறள்வெண்பாவிற்குச் சான்று தருக.

6. "வழிபடும் கடவுள், நின்னைப் பாதுகாக்கப் பழியில்லாத செல்வத்தோடு வழி வழி சிறந்து வாழ்க" என்று கூறுவது எவ்வகை மருட்பா?

7. செய்யுளின் வகைகள் எத்தனை?

8. தனியே நின்று ஒரு பொருள் பயந்து முற்றுப் பெறுவது ________

9. ‘செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே’ – விளக்குக.

10. வேற்றுப்பொருள் வைப்பணியின் வகைகள் எத்தனை?

11. கூற்றினும் குறிப்பினும் ஒப்புடை இருபொருளை கூறுவது எது?

12. “மாலை நிலவொளிப்ப மாதர் இழைப்புனைந்த நீல மணிகள் நிழலுமிழ” இதில் பயின்று வரும் அணியினைச் சுட்டுக.

13. செல்வ மிகுதியையும், உள்ள உயர்வையும் கூறுவது.

14. அவநுதி அணி எத்தனை வகைப்படும்?

15. தான் கருதிய குணங்கள் எல்லாவற்றையும் கூட்டி வைத்து சொல்வது.

பகுதி ஆ — (5 × 2 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் ஒரு தொடரில் விடை தருக.

16. அசைக்கு உறுப்பாவன எவை?

17. பாக்களின் அடிவரையறையைச் சுட்டுக.

18. கலிப்பாவின் முதன்மை உறுப்புக்கள் யாவை?

19. வஞ்சித் தாழிசை என்றால் என்ன?

20. ‘முத்தகம்’ – விளக்குக.

21. செறிவு என்பது யாது?

22. ஒட்டணியின் வேறுபெயர்கள் யாவை?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. அசை குறித்து எழுதுக.

24. கொச்சகக் கலிப்பா குறித்து விளக்குக.

25. குளகச் செய்யுள் குறித்து எழுதுக.

26. முரணித் தோன்றல் என்பது யாது?

27. அதிசயவணியின் வகைகளை விளக்குக.

28. சிலேடை அணி குறித்து விளக்கி வரைக.

29. புனல் யாற்றுப் பொருள்கோள் குறித்து எழுதுக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடை தருக.

30. ஆசிரியப்பா வகைகள் குறித்து விளக்கி எழுதுக.

31. பெருங்காப்பிய இலக்கணம் குறித்து எடுத்துரைக்க.

32. ‘அம்மை முதலிய ஆயிரு நான்மையும்’ குறித்த செய்திகளை தொகுத்துரைக்க.

33. தற்குறிப்பேற்றணி குறித்து விளக்குக.

34. விசேடவணியின் தன்மையினை எடுத்துரைக்க.

| **UG–172** | **BTM–33** |
|---|---|

# B.A. DEGREE EXAMINATION – JUNE, 2018.

Third Year

Tamil

தமிழ்மொழி வரலாறும் தமிழ் இலக்கிய வரலாறும்

Time : 3 hours Maximum marks : 75

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒரு தொடரில் விடை தருக.

1. 'திராவிட' – சொல் பொருள் கூறுக.

2. மொழியியல் என்றால் என்ன?

3. 'தந்தான்' – என்பதன் அடிச்சொல் என்ன?

4. மெய்யெழுத்துக்களில் மொழிக்கு முதலில் வருவன?

5. உணர்ச்சி மொழிக்கு உதாரணம் தருக.

6. சொற்களைக் கடன் வாங்குவதற்கான இரண்டு காரணங்களைக் கூறுக.

7. இந்திய மொழிகள் எத்தனை வகை என மு.வ. பகுக்கிறார்?

8. மணிபிரவாள நடை என்றால் என்ன?

9. தமிழின் முதல் காப்பியம் எது?

10. குறுந்தொகை நூலைத் தொகுத்தவர் யார்?

11. திருவாசகம் குறிப்பு எழுதுக.

12. பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் எத்தனை?

13. எட்டுத்தொகை நூல்களுள் புறநூல்களைச் சுட்டுக.

14. தமிழ்ப் பாணர் வாழ்வும் வரலாறும் – யார் எழுதியது?

15. இரட்சண்ய மனோகரம் நூலின் ஆசிரியர் யார்?

பகுதி ஆ — ($5 \times 2 = 10$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.

16. சிறப்புப் பொருட்பேறு என்றால் என்ன?

17. வட திராவிட மொழிகள் எவையெவை?

18. முல்லைத் திணைக்கான முதற்பொருளைக் கூறுக.

19. சிறுபஞ்சமூலம் – குறிப்பு வரைக.

20. கம்பர் – குறிப்பு தருக.

21. சதகம் என்றால் என்ன?

22. இளம்பூரணர் எழுதிய உரைகள் எவை?

பகுதி இ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்தனுக்கு ஒரு பக்க அளவில் விடை தருக.

23. திருந்திய திராவிட மொழிகள் எவை? விளக்குக.

24. பேச்சுமொழி – எழுத்துமொழி வேறுபாடுகள் ஐந்தினைக் கூறுக.

25. கல்லாடம் – சிறுகுறிப்பு வரைக.

26. ஐம்பெரும் காப்பியத்துள் 'சீவக சிந்தாமணி' – குறித்து எழுதுக.

27. பாட்டுக்கொரு புலவன் "பாரதி" – ஆய்ந்து எழுதுக.

28. திருமுருகாற்றுப்படை பற்றி எழுதுக.

29. எட்டுத்தொகையில் அகநூல்கள் பற்றி விளக்குக.

பகுதி ஈ — (3 × 10 = 30 மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மூன்று பக்க அளவில் விடை தருக.

30. 'இடைக்காலத் தமிழ்' – பற்றி விவரித்து எழுதுக.

31. தமிழின் கிளைமொழிகள் அமைப்புக் குறித்து விவரி.

32. தமிழில் நீதி இலக்கியங்கள் பற்றிக் கட்டுரை வரைக.

33. 'சங்க காலம் பொற்காலம்' – என்பதனை நிறுவுக.

34. தமிழில் சமயநூல்கள் தோற்றமும், சமுதாய மறுமலர்ச்சியும் குறித்து இலக்கிய நோக்கில் ஆராய்க.

———————